புரட்சித் தலைவி ஆட்சியில் கல்விக் கொள்கையில் மாறுதல் செய்து ஆரம்பப் பள்ளியிலிருந்து அரசை நம்பிப் பயில்கிற ஏழைக் குழந்தைகளுக்கு ஆங்கிலம் கற்றுத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான கருத்துக்கள் முன்பே பாட நூல்களிலே இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 435, திரு. மு. நடேசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*435--*

**சேலம் மாவட்டத்தில் பல்கலைக்கழகம் ஏற்படுத்துதல்.**

**26190-திரு. மு. நடேசன்:*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சேலம் மாவட்டத்தில் பல்கலைக் கழகம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. மு. நடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில 13 ஆர்ட்ஸ் காலேஜ்கள் உள்ளன. அதேபோல் ப்ரஃபஸனல் காலேஜ்கள் 9 உள்ளன. பாலிடெக்னிக்குகள் 9 உள்ளன. மேலும் சேலம் மாவட்டத்தில 134 மேல்நிலைப்பள்ளிகள் உள்ளன. சேலத்திலிருந்து சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு மாணவர்கள் வருகின்ற காரணத்தால் நீண்ட நெடிய தூரம் வரவேண்டி இருக்கிறது. ஆகவே புரட்சித் தலைவி ஆட்சியில் கருணைகூர்ந்து இந்தக் கோரிக்கைகளை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலும், அதன் அருகிலே இருக்கின்ற தர்மபுரி மாவட்டத்திலும் அதிக எண்ணிக்கையிலே கல்லூரிகள்

*1994 ஏப்ரல் 28*]

இருக்கின்றன என்பதை அரசு அறியும். மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொல்லியது போல பாலிடெக்னிக் என்ற பல்தொழில் பயிற்சி நிலையங்கள் பல்கலைக் கழகத்தின் ஆளுகைக்குள்ளே வராது. சேலத்தை பொறுத்தவரையில் சேலத்திலும் வேலூரிலும் சென்னை பல்கலைக்கழகத்தின் விரிவாக்க மையம் அமைய இருக்கின்றது. அதற்காக 100 ஏக்கர் நிலத்தை ஒப்படை செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவரை இப்போது கேட்டிருக்கிறோம். அது தவிர தனியாக பல்கலைக்கழகம் அமைப்பதற்கு தற்போது அவசியம் எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நடேசன், இந்த மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கல்வி மானியக் கோரிக்கையிலே இந்தக் கோரிக்கைகளை வைத்தீர்கள். அதற்குப் பதிலும் பெற்றிருக்கிறீர்கள். ஒரே ஒரு கேள்வி கேட்கவும்.

**திரு. மு. நடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சேலத்திலே செட்டிச்சாவடி என்ற இடத்திலே 600 ஏக்கர் நிலம் இருக்கிறது என்ற தகவல் தெரியும். அந்த இடத்தில் யுனிவர்சிட்டி ஆரம்பிக்கலாம், அல்லது மத்திய அரசானது தமிழ்நாட்டுக்கு ஒரு பல்கலைக்கழகத்தை ஒதுக்கியிருப்பதாக நான் அறிகிறேன். எனவே அந்த மத்திய அரசினுடைய பல்கலைக் கழகத்தையாவது சேலம் மாவட்டத்தில் ஏற்படுத்தித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செட்டிச்சாவடியில் 100 ஏக்கர் நிலம் விரிவாக்க மையத்திற்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அங்கே விரிவாக்க மையம் விரைவில் அமைய இருக்கின்றது. மத்திய பல்கலைக்கழகம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 436, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

*436--*

**தொழிலாளர்களுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்.**

*24040--**டாக்டர் வெ. சரோஜா:***

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--